Roll No. | | | |

INDIAN SCHOOL SALALAH

SECOND TERM EXAMINATION, FEB - MARCH 2026

தமிழ் (SL)

Class: VI-H　　　　Date: 03.03.2026

Time: 3HOURS　　　　Maximum Marks: 80

---

## பகுதி - 1

**I.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**　　　　**15X1=15**

1. "**அறிவு + உடைமை**" என்னும் சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது.

அ, அறிவுடைமை　　　ஆ, அறிவுஉடைமை　　　இ, அறிவடைமை

2. "**வண்ணப்படங்கள்**" என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது.

அ, வண்ண + படங்கள்　　ஆ, வண்ணம் + படங்கள்　　இ, வண்மை + படங்கள்

3. "**எவ்வுயிரும்**" என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ______________

அ, எவ் + வுயிரும்　　　ஆ, எ + உயிரும்　　　இ, எவ் + உயிரும்

4. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது __________ ஆகும்.

அ, பொறை　　　ஆ, பொறுமை　　　இ, அமைதி

5. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண்.

அ, கண்ணகி　　　ஆ, ஆதிரை　　　இ, மாதவி

6. "**வெண்மணல்**" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

அ, வெள்ளை + மணல்　　ஆ, வெண் + மணல்　　இ, வெண்மை + மணல்

7. காந்தியடிகள் தோற்றத்தில் மாற்றம் ஏற்படுத்திய ஊர்.

அ, மதுரை　　　ஆ,சென்னை　　　இ, விருதுநகர்

8. "**தம் + உயிர்** "என்னும் சொல்லைப் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ, தம்உயிர்　　　ஆ, தம்முயிர்　　　இ, தம்யுயிர்

9. பாரதியாரை தமிழ்நாட்டு கவிஞர் என்று கூறியர்.

அ, இராஜாஜி ஆ, ஜி.யு.போப் இ, திருவள்ளுவர்

10. அரேபியாவில் இருந்து வாங்கப்பட்டவை.

அ, மருந்து ஆ, ஒட்டகம் இ, குதிரைகள்

11. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர்_______________

அ, நுகர்வோர் ஆ, பெருவணிகர் இ, சிறு வணிகர்கள்

12. பிணி என்பதன் பொருள் _____________________

அ, சோர்வு ஆ, நோய் இ, பயம்

13. "**நன்றியறிதல்**" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ, நன்றி + அறிதல் ஆ, நன்று + அறிதல் இ, நன்றி + யறிதல்

14. "**தானென்று**" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

அ, தான் + அன்று ஆ, தான் + னென்று இ, தான் + என்று

15. எல்லாரும் _______ வாழ வேண்டும்.

அ, இன்பமாக ஆ, நிறைவாக இ. அன்பாக

**II.கோடிட்ட இடங்களை நிரப்புக**: **3X1=3**

1. மணிமேகலை _______ நகரைச் சேர்ந்தவள்.

2. காந்தியடிகள் எந்தப் பெரியவரின் அடிநிழலில் இருந்து தமிழ கற்க வேண்டும் என்று விரும்பினார்? _______________

3. _________________ மறக்கக் கூடாது.

III. **பொருத்துக.** **4X1=4**

| | |
|---|---|
| 1. இலக்கிய மாநாடு | அ) பாரதியார் |
| 2. தமிழ்நாட்டுக் கவிஞர் | ஆ) சென்னை |
| 3. குற்றாலம் | இ) ஜி.யு.போப் |
| 4. தமிழ்க்கையேடு | ஈ) அருவி |

IV. **மனபாடப்பாடல்** 5

"**தம்உயிர்**" எனத் தொடங்கும்" **பராபரக்கண்ணி**" பாடலை அடிமாறாமல் எழுதுக.

## பகுதி - 2

V. **குறுவினா** 8X2=16

1. எதனை மறத்தல் கூடாது என ஆசாரக்கோவை கூறுகிறது?
2. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டு தருக?
3. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
4. காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை?
5. அமுதசுரபியின் சிறப்பு யாது?
6. பெயர்ச்சொல் என்றால் என்ன?
7. இடுகுறிப்பெயர் என்றால் என்ன?
8. சொற்களின் வகைகளை எழுதுக.

VI. **சிறுவினா** 3X3=9

1. ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?
2. சிறுவணிகம், பெருவணிகம் வேறுபடுத்துக
3. மணிபல்லவத்தீவு எவ்வாறு காட்சி அளித்தது?

## பகுதி -3

VII.**சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துங்கள்** 5X 1= 5

- சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுமாறு மன்னனிடம் வேண்டினாள்
- மணிமேகலை மணிபல்லவத் தீவிற்குச் சென்றாள்
- சிறைச்சாலைக்குச் சென்று உணவிட்டாள்
- அமுதசுரபியைப் பெற்றாள்
- ஆதிரையிடம் சென்று முதல் உணவைப் பெற்றாள்

VIII.**பின்வரும் பாடலைப் படித்து எதுகை, மோனை சொற்களை எடுத்து எழுதுக.** 4

**"நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு**

**இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு**

**ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை**

**நல்லினத் தாரோடு நட்டல்- இவையட்டும்**

**சொல்லிய ஆசார வித்து"**

**IX.கீழ்காணும் பத்தியை படித்து வினாக்களுக்கு விடை எழுதுக. 4X1=4**

இந்திய விடுதலைக்கு பாடுபட்டவர்களுள் ஒருவர் வ. .உ சிதம்பரனார். வ..உ. சி அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமைப் பெற்றிருந்தார். அவர் வழக்கறிஞர் எழுத்தாளர் ,பேச்சாளர் ,தொழிற்சங்க தலைவர் என்னும் பன்முகத்தன்மை பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் கப்பலுக்குப் போட்டியாக உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் சுதேச நாவாய் சங்கம் என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். வ. உ. சி சென்னைக்குச் செல்லும் போது பாரதியாரை சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மேலும் பாரதியார் பாடலை விரும்பிக் கேட்பார்.

**வினாக்கள்**

1.சுதேச நாவாய் சங்கத்தை நிறுவியவர் யார்?

2.வ .உ. சி சென்னைச் செல்லும்போது யாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் ?

3.வ. உ. சி அவர்கள் யாருடைய பாடல்களை விரும்பிக் கேட்பார்?

4. வ. உ. சி அவர்கள் புலமை பெற்றிருந்த மொழிகள் யாவை?

**X.அகர வரிசைப்படுத்துக. 2**

**[ஒழுக்கம், உயிர், ஆடு, எளிமை, அன்பு, இரக்கம்,ஓசை,ஐந்து ,ஈதழ் ,ஊக்கம் ,ஏது ஔவை]**

**XI. பின்வரும் தொடர்களில் உள்ள பெயர்ச்சொற்களை எவ்வகைப் பெயர்ச்சொல் என்பதை எழுதுக. 3X1=3**

1.புகழ்பெற்ற **<u>மதுரைக்குச்</u>** சென்றேன். _______

2. **<u>புத்தகம்</u>** வாங்கி வந்தேன் _______

3. இறைவனைக் **<u>கை</u>** தொழுதேன். ______

**பகுதி - 4**

XII.நூல் நிலையம்/ படிப்பகம் அமைக்க வேண்டி ஊர்ப்பொதுமக்களின் கூட்டு விண்ணப்பம். 7

**[அனுப்புநர், பெறுநர், காரணம், உறைமேல்முகவரி]**

**XIII. கலைச்சொல் எழுதுக.** **3X1=3**

1.சமூகப் பணியாளர் -

2.கலைக்கூடம் -

3.இலக்கியம்-

*************************************************************